ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ் ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-3, இதழ்-2, சூன் 2020

# திணை இலக்கியக் கோட்பாடு

**கு.வெ. பாலசுப்பிரமணியன்**

தமிழ்ப் பேராசிரியர் (பணி நிறைவு), தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

திணை இலக்கியம் என்பது சங்க காலத்திற்கே உரியதாகும். அக்கால மொழியை செம்மொழி என்றும், அக்கால இலக்கியத்தைச் செவ்விலக்கியம் (Classical Literature) என்றும் கூறுவது தகும். தமிழ்ச் செவ்விலக்கியம் காட்டும் திணை இலக்கியம் என்னும் வகைமை தமிழுக்கே உரியது. திணை இலக்கிய அமைப்புக் காட்டும் செய்யுள் நுவல்நெறி தமிழை உயர்தனிச் செம்மொழியாகச் காட்டும் கூறுகளுள் ஒன்று.

அஃறிணை உயர்திணை என்னும் பகுப்பு அறிவுத் தொடர்புடையது. அகத்திணை, புறத்திணை என்னும் பகுப்பு ஒழுக்கநெறித் தொடர்புடையது. இவை தமிழர்தம் அக ஒழுகலாற்றையும், புற ஒழுகலாற்றையும் காட்டுவன “தமிழ் நூல்களிற் கூறப்படும் அகமும் புறமுமாகிய ஒழுக்கம்” என்பது திணை குறித்த எளிய விளக்கமாகும் (Tamil Lexicon> Volume III> Part I> Page No. 1874).

**அகத்திணையும் புறத்திணையும்**

திணை என்னும் பெயர் அகத்திணை,புறத்திணை என்னும் இரண்டையும் குறிக்குமெனினும் அகத்திணையே சிறப்புறக் குறிப்பதாகும். ஆகத்திணையில் வழுவியன புறத்திணை எனவும், அகத்திணை இலக்கணம் அரில்தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் அறிவர் எனவும் கூறுவது கொண்டு அகத்திணைத் தலைமை அறியலாம். அகமே மிகுதியாகப் பாடப் பெற்றது புலவர் பதின்மர் தலைக்குப் பத்தாக புறப்பொருள் பாடினர் என்பது வரலாறு. ஆனால் ஐவர் ஐந்நூறு அகம் பாடினரென்றும் ஐவர் நூற்றைம்பது கவி பாடினரென்றும் அறியலாம். காதலென்பது கவிதையின் மொழியாக அக்காலத்துமஇருந்தமை உணரலாம்.

**பிறமொழியில் அகத்திணை**

சங்க அகப்பாடல்களில் இலக்கண அடிப்படை தனித்தன்மையுடையது. காதற் பாடல்கள் எல்லாம் அகப்பாடல்களாக மாட்டா. முதல், கரு, உரிப்பொருள் என்ற முப்பொருள் அமைப்பில் யாப்புறுத்தப் பெறுவதே அகப்பாடலாகும். எல்லா மொழிகளிலும் காதற் பாடல்கள் உள்ளன. ஆனால் அகப்பாடல்கள் தமிழில் மட்டுமே உண்டு. ‘அகத்திணைப் பொருள்’ என்பதற்கு, அகத்திணையாகிய பொருள் (Love Theme), இன்ப ஒழுக்கம் கூறும் நூல் (Love Literature)> அகத்திணை இலக்கணம் (Grammar of Love Poetry), காம இன்பம் (Sexual Pleasure)> உட்பொருள் (Inner Meaning)> என்ற ஐந்து பொருண்மைகள் கூறப்பெறுகின்றன (Ibid, Volume I, Page No.12). அகத்திணைப் பாட்டில் இவ்வைந்துக்கும் இடமுண்டு அகம்; அகப்பொருள என்பன இலக்கிய கலைச்சொற்கள் இச்சொற்களின் நுட்பமும்; பயில்வும் அறியாமல், இவற்றுக்குக் காதல், காதற்பொருள் என்று மட்டும் பொருளுரைப்பது பொருந்துவதாகாது. வடமொழிப் புலமையும் பற்றுமிக்க சிவஞான முனிவர் தமிழிலக்கணத்தில் உள்ளனவாகி வடமொழிக்கண் பெறப்படாதன எனஆறு செய்திகளைக் குறிப்பர். அவை: 1. மொழிப் புணர்ச்சி செய்கைகள், குறியீடுகள், 2. வினைகுறிப்பு, வினைத்தொகைமுதலான சொல்லிலக்கணங்கள், 3. உயர்திணை அஃறிணை என்னும் சொற்பாகுபாடு. 4. அகம் புறம்என்னும் பொருட்பாகுபாடு, 5. குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடு, 6. வெண்பா முதலியன செய்யுளிலக்கண என்பன3. பரிதிமாற் கலைஞரும் அகத்திணை, புறத்திணைகளைக் குறிக்கையில் “வடமொழியிலிருந்து என்றும் கிடைக்காத தனித்தமிழ் விஷயங்கள்” என்று கூறுவர் (அகப்பொருளும் அதன்; துறைகளும், புறப்பொருளும் அதன் துறைகளும் இவ்விரு வகைப் பொருள்களின் இயைபுகளும், வடமொழியினின்றும் என்றென்றும் கிடைக்கவியலாத அரிய தனித்தமிழ் விஷயங்களாம்” தமிழ் மொழியின் வரலாறு, வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பக்கம், 42). ஆயினும் அகத்திணைப் பனுவல்கள் வடமொழியிலும் உள்ளதாகவும், இவை தமிழுக்கே உரியன என்பதிற்கில்லை எனவும் வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறுவர் (Claims are some times made that the Aham pomes that is poem on love are the sole monopoly of the ancient Tamils. Sanskrit Literature abounds with poem of this nature and indeed some of these poems are very ancient. I may refer to the famous Hala satasai. “S.Vaiyapuri Pillai, History of Tamil Language and Literature.). சாதவாகன அரசன் ஹலன் என்பார் எழுதியதாகவும், தொகுத்ததாகவும் கூறப்பெறும் எழுநூறு பாடல்களை (Sattasai), அவர் தமிழ் அகத்திணைப் பனுவல்களுக்கு நிகராகக் குறிக்கின்றார். ஆனால் இப்பாடல்கள் 1. திணைக் குறியீடு அற்றவை, 2. பெண்ணின் மார்பக வருணை போன்று உறுப்பு வருணனைகள் மிகுதியாக கொண்டவை. 3. முதல்,கரு,உரிப்பொருள் என்ற கட்டமைப்புப் பெறாதவை என்ற செய்திகளை எண்ணுங்கால் அகத்திணைப் பாடல்கள் தமிழுக்கே உரிய வகைமையின் என்பது அறியப்பெறும். சுட்டசிப் பாடல்களை வாத்சாயனரின் காமசூத்திரத்தோடு ஒப்பிடுவது பொருந்துவதாகலாம் (Pomes on life and love in Ancient India : Hala’s Sattasai. Peter khorache and Hermen Tickes, State University of the New York, USA, 2009).

**திணைக் கட்டமைப்பு**

புறப்பாடலைவிட அகப்பாடலுக்கே திணை கட்டமைப்பு விதிகள் மிகுதியாகும். இவ்விதிகளுள் சில புறப்பாடல்களுக்கும் பொருந்துவதாகலாம் என்பர். உள்ளுறை, இறைச்சி என்பன புறப்பாடல்களிற் பயில்வதில்லை. புறப்பாட்டில் ஓர் உட்பொருள் அமையுமாயின் அதனை குறிப்புப் பொருள்

ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-2, சூன் 2020

என்பதே. பொருந்தும். அகத்திணைக் கட்டமைப்புக்கு முதல், கரு, உரி என்ற மூன்று மூன்றும் உரியன. நிலச்சூழல் (Geographical Environment), பருவமும் பொழுதும் (Season and Climate), புள் விலங்கு, என்னும் இயங்குதிணை (Fauna)>செடி, கொடி, பயிர், புல், பூண்டு, மரம் என்னும் நிலைத் திணை (Flora), உள்ளத்துணர்வு (Sentiment), ஆகியன திணை இலக்கிய ஆக்கக் கூறுகளாகும் (The Treatment of Nature in Sangam Literature, M.Varadarajan, P.4). இவையனைத்திலும் அறிவுசான்ற புலவன் கட்டுமானத் திறத்தொடு யாப்புறுத்துவதே அகத்திணைப் பனுவலாகும். அகத்திணைக்கும், புறத்திணைக்கும் அமைந்த இயைபை ஆழமாக நோக்கினால் அவ்வியைபுக்கு முதல், கரு, உரி என்ற மூன்று பொருள்களே அடிப்படை என அறியலாம். அகப்பாடல்களில் சிலவற்றுக்குத் திணை தெளிவில்லாமைக்கும், சில அகநூல்களில் திணை குறிக்கப்படாமைக்கும் உரிய காரணத்தை ஈண்டு ஆராய்வதும் திணை இலக்கியக் கோட்பாட்டைத் தெளிய உதவும். சங்கப் பனுவலைப் பாடினார் எவரும் திணை குறித்திலர். நற்றிணையிலும் குறுந்தொகையிலும் திணை தெளிய இயலாப் பாடல்கள் உள்ளன. ஐங்குறுநூற்றைத் திணைக்கொருவர் பாடியிருப்பினும் திணை மயங்கி வரும் பாடல்கள் உள்ளன. கலித்தொகையிலும் அகநானூற்றிலும் திணைக் கட்டமைப்புத் தெளிவுற அமைந்துள்ளது. இதற்குரிய காரணங்கள் யாவை? 1. ஆடிக்குறுக்கமுடைய பாடல்களில் கருப்பொருள் விளக்கம் இன்மை அல்லது மிகாமை. 2. உரிப்பொருள் வேறுபாடு தெளிய அறிய இயலாமை என்ற இரண்டுமாகும். திணை குறித்தற்கு உரிப்பொருளே வேண்டுமெனினும், அவ்வுரிப் பொருளைத் தெளிய அறிதற்கு முதற்பொருளும் கருப்பொருளும் வேண்டும். மேலும், எவ்வளவு நெடும்பாட்டாயினும் உரிப்பொருள் ஈரடிகட்கு மேல் வருதலில்லை. எஞ்சிய அடிகள் முதல் கருப்பொருள்களைக் குறித்தமைந்து பாட்டின் திணையை நன்கு புலப்படுத்திவிடுகின்றன. ஆகவே முதல், கரு, உரிப்பொருள்களின் கட்டமைப்புச் சிறப்பிலேயே பாட்டின் திணைகள் ஐயத்திற்கிடமின்றி அமைகின்றன. முல்லைப் பாட்டிலும் நெடுநல்வாடையிலும், குறிஞ்சிப்பாட்டிலும் பட்டினப்பாலையிலும் திணை ஐயம் தோன்றாது. ஆனால் குநற்தொiயின் 51, 57, 81, 109, 145, 172, 184, 305, 321, 381 ஆகிய பாடல்களை நெய்தலெனக் கருதுவாரும் உளர். குறிஞ்சியெனக் கருதுவாரும் உளர். அடிக்குறுக்கமும் உரிப்பொருள் நெருக்கமுமே இத்தெளிவின்மையைத் தோற்றுவித்துள்ளன.

இனி முப்பொருள்களுள் நிலம் முதலானவை பாடல்களுட் பெறுமிடமும் தகுதியும் ஆராய்தற்குரியன. இம்முப்பொருட் கட்டுமானத்தால் யாப்புறுத்தப்பெற்ற செய்யுளை ஆராய்ந்தால் செவ்விலக்கியப் படைப்பிற்கு இயற்கையே மூலப்பொருள் என்பதறியப்பெறும். இயற்கையின் மொழியாகச் செய்யுள் பிறத்தலை இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன. வேறு எக்காலத்திலும் இயற்கைக்கும் மனிதனுக்கும் இத்தகைய உறவில்லை (Ibid, Pages, 406, 419). அக்காலத்தில் இயற்கையின் ஒவ்வொரு கூறான செடியும் கொடியும் பயிரும் புள்ளும் விலங்கும் வெறும் இயற்கைப் புனைவுக்குப் பயன்பாட்டில. இவற்றில் ஒவ்வொன்றும் வாழ்வியலைப் புலப்படுத்தும் குறியீடாகச் செய்யுளில் ஆளப் பெற்றுள்ளன.

**மண்ணும் மனித உறவும்**

நிலம் பாட்டின் முதற்பொருளாகும். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், என்னும் நானிலம் தமிழர்க்கு நானிலமாய உலகமுமாம். இவ்வகை நிலப்பிரிவுகள் உலகெங்கும் உளவாகலாம். ஆனால் இவ்வகை நிலப்பகுப்புத் தமிழ் இலக்கியத்துள் பயின்றாங்குப் பிற மொழிகளிற் பயின்றிலது நிலத்தை இயல்பாக எண்ணுங்காலும் நாடு காடு, அவல், மிசை, என முறையே மருதம், முல்லை நெய்தல், குறிஞ்சியினைச் சுட்டுவது தமிழ் செவ்விலக்கியம் இயற்கைப் பண்பாகச் கொண்டுவிட்டது. திணைதொறும் மரீஇய திணைநிலப் பெயர்களான கானவன்;, குன்றவன்;, துறைவன், பரதவன், என்ற பெயர்கள் அவர்களைச் சுட்டுதற்குப் பயன்பட்டன. தன் காதல் வீருப்பத்திற்குத் தடையாகப் பெற்றோர் இருப்பதை அறிந்த தலைமகள்,

***சிறுகுடி யீரே சிறுகுடி யீரே***
***வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா***
***கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்***
***அல்ல புரிந்தொழுக லான்.*** (கலித்தொகை, 39: 11-14)

என்று கூறுகிறாள். தன் காதலுக்குத் தடை விதிப்பின் நிலம் விளையாது மலடாகிப் போகுமென்று கூறும்மனநிலை நினைக்கத்தக்கது. இந்த நில உறவும் மண்ணோடு இயைந்த மனப்போக்கும் அகத்திணைப் பாடல்கள் பலவற்றிலும் எதிரொலிக்கின்றன. நிலம், நீர், வானம் என்ற இயற்கையின் முக்கூறுகளே அக்கால மக்களின் பண்பை அளக்கும் கருவிகளாக அமைந்த தன்மையினை "நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று, நீரினும், ஆரளவின்றே" என்று கூறுவதாலும் அறியலாம்.

**பருவமும் பொழுதும்**

இன்று காலத்தின் பண்புகள் மாறிக் கிடக்கின்றன. பருவங்கள் சிதைந்திருக்கின்றன. கோடை, கூதிர், மாரிக் காலங்களின் பண்புகளோடு இன்று நமக்கு நெருக்கமான உறவில்லை. அறிவியல் வளர்ச்சியில் நாம் காலம் பருவம் ஆகியவற்றுக்கு மாறான உலகில் வாழும் வசதிகளைப் பெற்றிருக்கிறோம். செவ்விலக்கிய காலத்தில் கதிரும் நிலவும், பூக்களும், புட்களும் விலங்குகளும் காலநேரங்களைக் காட்டின. மகள் பூப்பெய்தினாள்: உழவன் கார் விதைத்தான்: குக்கூ என்றது கோழி, அதனெதிர் துட்கொன்றது தலைவி நெஞ்சம் என வாழ்க்கையைப் பருவங்களும் பொழுதுகளும் ஆட்சி செய்தன. பருவமும் பொழுதும் (Season and Climate) வெறும் கால மாற்றங்களாக இல்லாமல் வாழ்க்கை இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு பெற்றன. "கானம் காரெனக் கூறினும் யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே" (குறுந்தொகை, 21) என்பதால் வாழ்க்கையும் இயற்கைப் பருவங்களும் கொண்டிருந்த தொடர்பறியப்படும்.

**இயங்கு திணையும் நிலைத் திணையும்**

கணவன் மனைவி அன்பின் நெருக்கத்தையும், இல்லற மாண்பையும் ஒழுக்க நெறியையும் இயற்கை அறிவுறுத்துவனவாகப் புலவர் புனையும் பகுதிகள் அகப் பாடல்களிற் பல. மாந்தர் இயல்பாகக் கொண்டொழுக வேண்டிய நெறிகளை விலங்கு, பறவைகளின் வாழ்க்கையில் ஏற்றிக்கூறும் முறையையும் பல பாடல்கள் காட்டுகின்றன. மந்தி கைம்மை நோன்பு நோற்கிறது. (குறுந்தொகை, 69) : களிறு கிடைத்த சிறிய அளவு நீரைத் தன் பிடியுண்ணக் கொடுத்து நிற்கிறது : புறவு தன் பெடையின் வெம்மை நீங்கச் சிறகால் விசிறுகின்றது. : மான் தன் பிணைக்குத் தன் உடம்பு நிழலைத் தருகிறது (கலித்தொகை, 11) உள்ளூர்க் குருவி தன் சூல் முதிர் பேடைக்கு ஈனும் இல்லம் சமைக்கின்றது (குறுந்தொகை, 85) என்று விலங்கு பறவைகளிடம் மாந்தரின் மேம்பட்ட கற்பும் கடப்பாடும் புகுத்தி உரைக்கப்பெறுகின்றன. வெள்ளாங்குருவின் பிள்ளை செத்ததைக் கேட்க நாரை செல்கின்றது (ஐங்குறுநூறு, 151) மந்தி நல்லவை மருள்வன நோக்கக் கழைவளர் அடுக்கத்தில் மயில் ஆடுகின்றது. (அகநானூறு, 81) இவ்வாறு பறவையும் விலங்கும் மாந்தர்க்குரிய பண்பும் கலையும் காட்டுகின்றனவாகச் சித்தரிக்கப் பெற்றன. தலைவனின் நயமில் நடத்தையை நயமாகவும், நாகரிகமாகவும் எடுத்துரைக்க விலங்குகளாய கருப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**செய்யுள் தொழிற்றியம் (Verse Making Technology)**

செவ்விலக்கிய காலத் தமிழர் வாழ்வில் உறைந்த நிலமும், கழிந்த பொழுதும், பயின்ற புள்ளும், பழக்கிய விலங்கும், விளைத்த பயிரும் என இயற்கைக் கூறுகள் பிரிக்க முடியாப் பிணைப்புற்றுக் கிடந்தன. இவை உள்ளத்துணர்ச்சியாம் உரிப்பொருளைப் பதித்துக் கட்டமைப்புறுத்துப் பெரிதும் பயன்பட்டுள. சங்கப் புலவன் செய்யுளியற்றும் கலையில் தனித்தன்மை வாய்ந்தவன். அகப்பொருளை முப்பொருளமைவில் கட்டமைப்புச் செய்யும் தொழிற்றிறம் (Techncraft) அவனது நுண்மான் நுழைபுலனைக் காட்டும். கைபுனைந்தியற்றாக் கவின்பெரு வனப்புடை இயற்கைச் சூழலைக் காட்சி பொருளாக மட்டுமின்றிக் கருத்துப் பொருளாகவும் காட்டிய தொழிற்றிறம் அவனுடையது. சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கற்போலவும், உடம்பொடு உயிரிடை உறவு போலவும், இருமலைப் புள்ளின் இணக்கம் போலவும், மொழியிற் கருத்துப் பொதிவு போலவும் ஓர் அரிய சேர்க்கைத் தொழிற்றிறம் அகப்பாட்டில் அமையும். முள்பொருளமைதியே பாட்டின் கட்டமைப்புப் பொருளை முடிய நாட்டுதற்குக் கருவியாவது. அகநானூற்றில் களிற்றுயானை, நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என முத்தொகுதி அமைய இக்கட்டமைப்புத் தொழிற்றிற வேறுபாடே காரணம். கபிலன் என்ற ஓராசிரியனே முத்தொகுதியிலும் இயற்றிய பாடலைக் கொண்டு இத்தொழிற்றிற வேறுபாடு உணரலாம். இதன் விரிவை எமது ‘சங்க இலக்கியக் கொள்கை’ நூலிற் கண்டு கொள்க. இதன்மேலும் இக்கட்டமைப்பின் உட்கூறு எனத் தகும் உள்ளுறையும் இறைச்சியும் புலவனின் செய்யுளாக்கத் தொழிற்றிறத்தின் நுணக்க உத்திகளாகும்.

**திணை இலக்கியக் கோட்பாட்டின் வளர்ச்சியும் மறைவும்**

திணை அறிவும், திணை தழீஇய ஒழுகலாறும் சங்க காலத்திற்கும் முற்பட்டன. இனக்குழு மக்கள் சமுதாயத்தில் நிலைபெற்றிருந்த திணை அறிவையும் ஒழுகலாற்றையும் தொல்காப்பியர்க்கு முன்பே யாப்புறுத்தும் செய்யுள்நெறி தோன்றிவிட்டது. சங்க இலக்கியத்தில் அதன் வளர்ந்த நிலை புலப்படும். சங்க இலக்கியத்திலேயே அதன் மாறுநிலை (Changing Trend) தோன்றிவிட்டது (தொல்காப்பியம், அகத்திணையியல் நூற்பா எண்கள்: 1, 6, 11, 12, 18, 53). இதற்கு அகஉத்தி அமைந்த புறப்பாடல்கள் சான்றாகும் (புறநானூறு, 83-85, 143-147). தொல்காப்பியத்தின் பாடாண் திணைக்குரிய கைக்கிளை இம்மாற்றத்திற்கு அடிகோலிவிட்டது. பத்திமை நெறிப்பனுவல்கள் அகத்திணையைத் தழுவிக் கொண்டன. ஆணுக்குரியதாகக் கூறப்பெற்ற மடலேறுதல் என்னும் அகத்துறை திருமங்கையாழ்வாரால் பெண்களுக்கும் உரியதாக்கப்பெற்றது. பாரதி, பாரதிதாசன் காலத்தில் திணைக்கோட்பாட்டில் புரட்சி புகுந்தது. காதலி உரிமையுடையவளாய்த் தன் காதலைப் பலரறியப் பேசவும் உரிமை கேட்கவும் தொடங்கினாள். இயற்கையோடு இரண்டறக் கலந்துநின்ற பண்டை வாழ்வு நகரச் செயற்கையோடும் அயல் நாகரிகக் கலப்போடும், கலந்த நிலையில் திணைக் கோட்பாடு மெல்ல மெல்ல மறைவுற்றது. ஆயினும் பன்னெடுங்கால மரபின் சுவடு இன்றைய கவிதைகளிலும் திணை இலக்கியப் பாங்கைப் புலப்படுத்தாமலில்லை. பாரதியின் கண்ணன்பாட்டில் தீர்த்தக்கரையும் செண்பகத் தோட்டமும் வெண்ணிலாப் பொழுதும் தலைவன் குறியிடத்திற்கு வந்து தலைவியைக் காணாது பின் நோக்குவ எல்லாம் அவளே போறலும் அகத்திணைச் சுவடுகளைக் காட்டும். பாரதிதாசனின் குடும்பவிளக்கில் குப்பத்துப் பெருமாள் தாத்தா “செவ்வாழைகளில் இரண்டு சிற்றணில் நெருங்கக் கண்டேன். அவ்விரண்டு அகன்ற பின்னர் வந்தேன் நான்” என மொழியும் உள்ளுறை சங்க மரபின் மீட்டுருவமாகும். திணைப் பாடல்களிலும் இவ்வகத்திணைச் சுவடு மாறமால் பதிவுகொள்வதை அறிஞர் காட்டுவர் (தமிழ்க் காதல், வ.சுப.மாணிக்கம், பக்கம், 263). திணை இலக்கியக் கோட்பாடு அறிந்து செவ்விலக்கியத்தை அணுகுவார்க்கு அவ்விலக்கியம் இன்பக் கருவூலங்களைத் திறக்கும்.

**நிறைவுரை**

1. திணை இலக்கியக் கோட்பாடு தமிழ்மொழிக்கே உரியது: இது பிறமொழிக் கண் பெறப்படாது.
2. காதற்பாடல்கள் எல்லாம் அகப்பாடல்கள் ஆகா. முதல், கரு, உரிப்பொருள்களின் ஒன்றும் பலவுமான கட்டமைப்பில் யாப்புறுத்தப் பெறுவதே அகப்பாட்டு.
3. இயற்கைக் கூறுகள் பலவும் பண்டைத் தமிழ்ப்புலவர்க்கு வாழ்வியற் குறியீடுகளாக அமைந்தன. நிலம், பொழுது, புள், விலங்கு, செடி, கொடி, பயிர் என்ற இவற்றைச் செய்யுளாக்கியத்திற்கே உரியது. உள்ளுறை, இறைச்சி என்பன இத்தொழிற்றிறத்தின நுணக்க உத்திகளாகும்.

ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-2, சூன் 2020

4. மகாராட்டிப் பிராகிருத மொழியில்; புனையப்பெற்றுள்ள ஹாலாவின் சட்டசி (7000 பாடல்கள்) காதற் பாடல்களே, அகப்பாடல்கள் ஆகா.
5. திணை இலக்கியக் கோட்பாடு திடுமெனத் தோன்றியதுமில்லை.திடுமென மறைந்ததுமில்லை. அதன் சுவடுகள் இன்றுவரை தமிழலக்கியத்தில் உள.
6. தமிழை உயர்தனிச் செம்மொழி எனக் கருதுவதற்குப் பல தகுதிகள் இருப்பினும் அவற்றுள் தலைமைசான்றது திணை இலக்கியக் கோட்பாடே.

## LITERARY THEORY OF THINAI

**G.V. Balasubramanian**

1. The literary doctrine belongs to the Tamil language, it is not found in other.

2. All the Love songs cannot be taken as Akam - as branch of the Poetry. The theme and title objects are responsible for the structure of title object or more of the Aka songs.

3. Many natural elements became life symbols for the ancient Tamil poets. Land, time, birds, animals, plants, vines and crops form the theme. Inner presence and animal flesh represent the tactics of the professional strategies.

4. Hala's Sattasi (7000 songs) composed in the Maharati Prakrit language are only love songs, they cannot be aka songs.

5. Genre Literary doctrine has not appeared abruptly. All of sudden disappeared. They remain in Tamil literature always.

6. Although Tamil language has many credentials, to be considered as a classical language. The chief among them is Literary doctrine.